133/2002

C

D
V211,31'P01
P01.112.1
222787

வெளியீடு 21-3-2001 Issued 21-3-2001

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள் செயலக வெளியீடு

# TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY DEBATES OFFICIAL REPORT

**சனிக்கிழமை, ஜனவரி 20, 2001 – தொகுதி 112 – எண் 1**

**Saturday the 20th January, 2001 – Volume 112 – No. 1**

*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009*

**Legislative Assembly Secretariat, Fort St. George, Chennai-600 009**

விலை ரூ. 3.00] [Price Rs. 3.00

20—1—2001 133 / 2002

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும் | iii - vii |
| Personnel of the Government of Tamil Nadu | ix -xii |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் பட்டியல் | xv -xvii |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பட்டியல் (அகர வரிசைப்படி) | xix -xxix |
| **1. இரங்கல் குறிப்புகள்——** | |
| முன்னாள் உறுப்பினர்கள் மறைவு | 1 - 2 |
| **2. இரங்கல் தீர்மானம்——** | |
| பேரவை உறுப்பினர் திரு. எம்.எம்.எஸ். அபுல்ஹசன் மறைவு | 2 - 17 |
| * மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் | 2 - 3, 15 - 17 |
| மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி | 3 - 5 |
| திரு. வி.கே. லட்சுமணன் | 5 - 6 |
| திரு. ஜி. பழனிசாமி | 6 - 7 |
| திரு. பி.ஆர். சுந்தரம் | 8 |
| திரு. ஐ. கணேசன் | 8 - 9 |
| திரு. ம. அப்துல் லத்திப் | 9 - 1 |
| * திரு. ஜே. ஹேமச்சந்திரன் | 12 |
| திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில் | 12 - 13 |

| | பக்கங்கள் |
|---|---|
| 2. இரங்கல் தீர்மானம்——தொடர்ச்சி | |
| திரு. சி. வேலாயுதன் | 13 - 14 |
| திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் | 14 - 15 |
| 3. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் | 17 - 21 |




## தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்

ஆளுநர் — நீதிபதி செல்வி மீ. பாத்திமா பீவி

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

1. முதலமைச்சர் .. மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: *பொது, பொது நிருவாகம், இந்திய ஆட்சிப் பணி, மாவட்ட வருவாய் அதிகாரிகள், உள் துறை, நிதி, திட்டம், தொழில்கள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, சிறுபான்மையினர் நலன், கடவுச் சீட்டு மற்றும் வணிக வரிகள்.*

2. கல்வி அமைச்சர் .. மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: *தொழிற்கல்வி உள்ளிட்ட கல்வி, சட்டமன்றம், தேர்தல்கள், மின்னணு வியல், அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் மற்றும் முன்னாள் இராணுவத்தினர்.*

3. மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: *மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலம் மற்றும் மின்சாரம்.*

4. ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. கோ.சி. மணி: *நகராட்சி நிருவாகம், சமுதாய வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் ஊரகக் கடன்கள், நகர்ப்பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல்.*

5. வேளாண்மைத் துறை அமைச்சர்: .. மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:
*வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக் கலை, கரும்புத் தீர்வை மற்றும் கரும்புப் பயிர் மேம்பாடு.*

6. பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. துரைமுருகன்:
*பொதுப் பணிகள், சிறு பாசனம் உள்ளிட்ட பாசனத் திட்டம், செயற் திட்டப் பணிகள், வனம் மற்றும் சின்கோனா.*

7. போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் .. மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:
*போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப் பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம், தொழிலாளர் நலன், மக்கள்தொகை, வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சி, இரும்பு மற்றும் எஃகுக் கட்டுப்பாடு மற்றும் பத்திரிகை அச்சுக் காகிதக் கட்டுப்பாடு.*

8. நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:
*நெடுஞ்சாலைகள் மற்றும் துறை முகங்கள்.*

9. தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை .. மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க் குடிமகன்:
*தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை.*



10. உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. கா.நா. நேரு:
*உணவு, விலைக் கட்டுப்பாடு மற்றும் குடிமைப் பொருட்கள் வழங்கல், பொது விநியோக முறை, கூட்டுறவு மற்றும் புள்ளிவிவரங்கள்.*

11. பால் வளத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. க. சுந்தரம்:
*பால், பால் பண்ணை வளர்ச்சி, குடிசை மாற்றுத் திட்டம் மற்றும் இட வசதிக் கட்டுப்பாடு.*

12. வருவாய்த் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:
*வருவாய், வருவாய் வாரியம், மாவட்ட வருவாய் நிருவாகம், மாவட்டத் துணை ஆட்சியாளர்கள் மற்றும் இசுலாமிய அறக்கட்டளை (வக்ஃப்).*

13. சட்டத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. ஆலடி அருணா:
*சட்டம், நீதிமன்றங்கள், சிறைச் சாலைகள், எடைகள் மற்றும் அளவைகள் குறித்த சட்டம், கம்பெனிகள் பதிவு, கடன் வழங்கல் பற்றிய சட்டமியற்றல் உட்பட கடன் நிவாரணம் மற்றும் சீட்டு நிதி பற்றிய சட்டம் இயற்றுதல்.*

14. கைத்தறித் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:
*கைத்தறி, துணித் தொழில்.*

15. பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:
*பிற்படுத்தப்பட்டோர் நலன், மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலன் மற்றும் சீர்மரபினர் நலன், வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டோர்.*

16. இளைஞர் மற்றும் மாசுக் கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:
விளையாட்டு, இளைஞர் பணிப் படை மற்றும் சுற்றுச் சூழல் மாசுக் கட்டுப்பாடு.

17. வீட்டு வசதித் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி:
வீட்டு வசதி, ஊரக வீட்டு வசதி, நகர அமைப்புத் திட்டமிடல் மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சி.

18. ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:
கிராமக் குடிசைத் தொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள், பதிவுத் துறை, முத்திரைத் தாள் சட்டம் மற்றும் சத்துணவு.

19. செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன்:
செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல் மற்றும் திரைப்படச் சட்டம், எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை மற்றும் அரசு அச்சகம்.

20. கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் .. மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:
கால்நடை பராமரிப்பு.

21. சமூக நலத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன்:
மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உட்பட சமூக நலன், இரவலர் காப்பு இல்லம், அனாதை இல்லங்கள், குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் திட்டம்.



22. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு:
ஆதிதிராவிடர் நலன், மலைவாழ் பழங்குடியினர் மற்றும் கொத்தடிமைத் தொழிலாளர்.

23. சுற்றுலாத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராசன்:
சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்.

24. கதர்த் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு:
கதர் வாரியம், பூமிதானம் மற்றும் கிராமதானம்.

25. மீன் வளத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன்:
மீன் வளம் மற்றும் மீன் வளர்ச்சிக் கழகம்.

---

## PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

## GOVERNOR -- Justice Selvi M. FATHIMA BEEVI

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

| | | |
|---|---|---|
| 1. **Chief Minister** | .. | **The Hon. Kalaignar M.Karunanidhi:** Public, General Administration, Indian Administrative Service, District Revenue Officers, Home, Finance, Planning, Industries, Prohibition and Excise, Minorities Welfare, Passports and Commercial Taxes. |
| 2. **Minister for Education** | .. | **The Hon. Prof. K. Anbazhagan:** Education including Technical Education, Legislature, Elections, Electronics, Science and Technology and Ex-Servicemen. |
| 3. **Minister for Health and Electricity** | .. | **The Hon. Thiru. Arcot N. Veerasamy:** Health, Medical Education and Family Welfare and Electricity. |
| 4. **Minister for Rural Development and Local Administration** | .. | **The Hon. Thiru. Ko. Si. Mani:** Municipal Administration, Community Development, Panchayats, Panchayat Unions and Rural Indebtedness and Urban and Rural Water Supply. |
| 5. **Minister for Agriculture** | .. | **The Hon. Thiru. Veerapandi S. Arumugam:** Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess and Sugarcane Development. |

6. **Minister for Public Works and Forest** .. **The Hon. Thiru. Duraimurugan:** Public Works, Irrigation including Minor Irrigation, Programme Works, Forest and Cinchona.

7. **Minister for Transport and Labour** .. **The Hon. Dr. K. Ponmudi:** Transport, Nationalised Transport, Motor Vehicles Act, Chennai Metropolitan Development Authority, Labour, Census, Employment and Training, Iron and Steel Control and Newsprint Control.

8. **Minister for Highways** .. **The Hon. Thiru. Pasumpon Tha. Kiruttinan:** Highways and Ports.

9. **Minister for Tamil Official Language, Tamil Culture and Hindu Religious and Charitable Endowments** .. **The Hon. Dr. M. Thamizhkudimagan:** Tamil Official Language, Tamil Culture and Hindu Religious and Charitable Endowments.

10. **Minister for Food, Public Distribution System and Co-operation** .. **The Hon. Thiru. K. N. Nehru:** Food, Price Control and Civil Supplies, Public Distribution System, Co-operation and Statistics.

11. **Minister for Milk** .. **The Hon. Thiru. K. Sundaram:** Milk and Dairy Development, Slum Clearance and Accommodation Control.

12. **Minister for Revenue** .. **The Hon. Thiru. A. Rahman Khan:** Revenue, Board of Revenue, District Revenue Establishment, Deputy Collectors and Wakf.



13. **Minister for Law** .. **The Hon. Thiru. Aladi Aruna:** Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Registration of Companies, Debt Relief including Legislation on Money Lending and Legislation on Chits.

14. **Minister for Handlooms** .. **The Hon. Thiru. N.K.K. Periasamy:** Handlooms, Textiles.

15. **Minister for Backward Classes** .. **The Hon. Thiru. M.R.K. Panneerselvam:** Backward Classes, Most Backward Classes and Denotified Communities, Indians Overseas, Refugees and Evacuees.

16. **Minister for Youth and Pollution Control** .. **The Hon. Thiru. Pongalur N. Palanisamy:** Sports, Youth Service Corps and Environmental Pollution Control..

17. **Minister for Housing** .. **The Hon. Thiru. K. Pitchandi:** Housing, Rural Housing Development, Town Planning and Urban Development.

18. **Minister for Rural Industries and Registration** .. **The Hon. Thiru. I. Periasamy:** Rural Industries including Village and Cottage Industries, Registration and Stamp Act and Nutritious Meals.

19. **Minister for Information, Publicity and Printing** .. **The Hon. Thiru. V. Mullaivendan:** Information and Publicity, Film Technology and Cinematography Act, Stationery and Printing and Government Press.

20. **Minister for Animal Husbandry** .. **The Hon. Pulavar P.M. Senguttuvan:** Animal Husbandry.

**21. Minister for Social Welfare** .. **The Hon. Tmt. S.P. Sarkunapandian:**
Social Welfare including Women's and Children's Welfare, Beggars Home, Orphanages and Correctional Administration and Integrated Child Development Services Scheme.

**22. Minister for Adi-Dravidar and Tribal Welfare** .. **The Hon. Thiru. Samayanallur S. Selvarasu:**
Adi-Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour.

**23. Minister for Tourism** .. **The Hon. Thiru. N. Suresh Rajan:**
Tourism and Tourism Development Corporation.

**24. Minister for Khadi** .. **The Hon. Thiru. Andhiyur P. Selvarasu:**
Khadi Board, Bhoodan and Gramdan.

**25. Minister for Fisheries** .. **The Hon. Tmt. S. Jenefer Chandran:**
Fisheries and Fisheries Development Corporation.

---



# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## பேரவைத் தலைவர்

*மாண்புமிகு திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்*

## பேரவைத் துணைத் தலைவர்

*மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி*

## மாற்றுத் தலைவர்கள் பட்டியல்*

*திரு. என்.எஸ். ராஜ்குமார் மன்றாடியார்*

*திரு. சப். தங்கவேலன்*

*திரு. ஏ.ஜி.சம்பத்*

*திரு. ப. மோகன் கந்தசாமி*

*திரு. பி. வெங்கடசாமி*

## செயலாளர்

*திரு. வெ. இராசாராமன்*

---

*22-1-2001 அன்று மாண்புமிகு பேரவைத் தலைவரால் அறிவிக்கப்பட்டவாறு

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் பட்டியல்

| | |
|---|---|
| 1. திருமதி பானுமதி ஆனந்தராஜன், பி.எஸ்சி., பி.ஜி.எல். | .. கூடுதல் செயலாளர் |
| 2. திரு. செ.ஏ. துரைபாண்டியன், பி.ஏ., பி.எல். | .. இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 3. திரு. கி. சாயிநாதன், பி.ஏ., பி.ஜி.எல். | .. இணைச் செயலாளர் |
| 4. திருமதி பவானி சுப்பையா, பி.ஏ., பி.ஜி.எல். | .. இணைச் செயலாளர் |
| 5. திரு. மு. ஆறுமுகப்பெருமாள், எம்.ஏ., பி.லிட். | .. இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 6. திரு. கோ. ஸ்ரீராமன், பி.காம். | .. இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 7. திரு. சா. கணேசன், பி.ஏ., பி.ஜி.எல். | .. இணைச் செயலாளர் |
| 8. திருமதி வீ.நா. உமா, பி.ஏ. | .. குழு அலுவலர் |
| 9. திரு. தி. திருமாவளவன், பி.எஸ்சி., பி.எல். | .. துணைச் செயலாளர் |
| 10. திரு. வெ. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.எல். | .. பேரவைத் தலைவரின் சிறப்புத் தனிச் செயலர் |
| 11. திரு. சு. ராஜகுரு | குழு அலுவலர் |
| 12. திரு. சௌரி அய்யாத்துரை | பேரவைத் தலைவரின் சிறப்பு நேர்முக உதவியாளர் |

13. திரு. க. சம்பத்ராஜன், பி.ஏ., பி.ஜி.எல். .. துணைச் செயலாளர்

14. திரு. எம். ஜீஜாபாய், பி.காம்., பி.ஜி.எல். .. துணைச் செயலாளர்

15. திரு. இரா. முருகானந்தம், பி.எஸ்சி., பி.எல். .. துணைச் செயலாளர்

16. திரு. இல. மாரியப்பன், பி.ஏ. .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்)

17. திரு. கோ. ஞானப்பிரகாசம், எம்.ஏ., பி.எல். .. துணைச் செயலாளர்

18. திரு. ஜி. அனீஸ் அகமத், எம்.ஏ., பி.ஜி.எல். .. துணைச் செயலாளர்

19. திரு. ம. பிலிப், எம்.ஏ., பி.ஜி.எல் .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்)

20. திருமதி சீ. கனகவல்லி, டி.சி.பி. .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்)

21. திரு. மா. செல்வராஜ், பி.எஸ்சி., பி.எல். .. துணைச் செயலாளர்

22. திரு. வெ.சி. சுப்பிரமணியன், எம்.ஏ., பி.எல். .. சார்புச் செயலாளர்

23. திரு. சு. பாலசுந்தர், பி.ஏ., பி.எல். .. சார்புச் செயலாளர்

24. திருமதி என். துளசிபாய், பி.ஏ. .. சார்புச் செயலாளர்

25. திரு. கோ. ரவீந்திரன், எம்.ஏ., பி.ஜி.எல். .. சார்புச் செயலாளர்

26. திரு. ஊ.கு. சுப்பிரமணியன், எம்.ஏ. .. சார்புச் செயலாளர்



27. திரு. டி. கோவிந்தராஜு, எம்.ஏ., பி.எல். .. சார்புச் செயலாளர்

28. திரு. ஏ.எம்.பி. ஜமாலுதீன், எம்.எஸ்சி., பி.எல். .. சார்புச் செயலாளர்

29. திரு. வெ. வெங்கடேசன், எம்.ஏ... தலைமை நிருபர்

30. திரு. ச. பாலகிருஷ்ணன், பி.எஸ்சி., பி.எல். .. சார்புச் செயலாளர்

31. திருமதி இரா. அமிர்தவல்லி, எம்.ஏ., பி.எல். .. சார்புச் செயலாளர்

32. திருமதி கி. இந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். .. சார்புச் செயலாளர்

33. திரு. நா. நடராஜன், பி.ஏ. பி.ஜி.எல்.. தலைமை நிருபர்

34. திருமதி என். மீனாட்சி, எம்.ஏ., பி.ஜி.எல். .. சார்புச் செயலாளர்

35. திரு. மு. பொன்னுரங்கம், எம்.ஏ., பி.எல். .. தலைமை நிருபர்

36. திரு. தி. உமாபதி, பி.ஏ. .. தலைமை நிருபர்

37. திருமதி ப. சரஸ்வதி, எம்.ஏ., பி.ஜி.எல். .. சார்புச் செயலாளர்

38. திரு. கோ. தேவராஜன், பி.ஏ. .. சார்புச் செயலாளர்

39. திருமதி ச.இரா. சுகுணா .. தலைமை நிருபர்

40. திருமதி சீ.நிர்மலா, பி.காம் .. தலைமை நிருபர்

41. திருமதி இரா. கஸ்தூரி, பி.ஏ., பி.ஜி.எல். .. சார்புச் செயலாளர்

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## உறுப்பினர்கள் பட்டியல் (அகர வரிசைப்படி)

### பெயர்களும் தொகுதிகளும்

| | |
|---|---|
| 1. அசோகன், திரு. அ. | .. திருவாரூர் (செ.வ.) |
| 2. அந்தியூர் ப. செல்வராசு, திரு. | .. அந்தியூர் (செ.வ.) |
| 3. அப்துல் லத்தீப், திரு. ம. | .. வாணியம்பாடி |
| 4. அப்பாவு, திரு. மு. | .. ராதாபுரம் |
| 5. அமரமூர்த்தி, திரு. டி. | .. அரியலூர் |
| 6. அய்யலுசாமி, திரு. வி. | .. கோவில்பட்டி |
| 7. அருண்குமார், திரு. பா. | .. மேட்டுப்பாளையம் |
| 8. அழகராஜா, திரு. என்.ஆர். | .. தேனி |
| 9. அழகிரி, திரு.ச. | .. சிதம்பரம் |
| 10. அழகுவேலு, திரு. ச. | .. கண்ட மங்கலம் (செ.வ.) |
| 11. அன்பழகன், திரு. வ. | .. செய்யார் |
| 12. அன்பழகன், பேராசிரியர் க. | .. துறைமுகம் |
| 13. அன்பில் பெரியசாமி, திரு. | .. திருச்சிராப்பள்ளி-2 |
| 14. ஆசையன், திரு. பெ. | .. ஆண்டிப்பட்டி |
| 15. ஆண்டமுத்து, திரு. வெ.அ. | .. பவானிசாகர் |
| 16. ஆரூண் ரஷீத், திரு. ஜே.எம் | .. வில்லிவாக்கம் |
| 17. ஆலடி அருணா, திரு. | .. ஆலங்குளம் |
| 18. ஆவுடையப்பன், திரு. இரா. | .. அம்பாசமுத்திரம் |
| 19. ஆறுமுகம், திரு. தி.ப. | .. திருச்செங்கோடு |

20. ஆற்காடு நா. வீராசாமி, திரு. .. அண்ணா நகர்

21. ஆனந்தன், திரு. பால. .. வந்தவாசி (செ.வ.)

22. இரகுமான்கான், திரு. அ. .. இராமநாதபுரம்

23. இராசமாணிக்கம், திரு. க.வெ.வீ. .. மேலூர்

24. இராசமாணிக்கம், திரு. பி. .. ஒரத்தநாடு

25. இராசன், திரு. வி.பி. .. ராஜபாளையம் (செ.வ.)

26. இராசேந்திரன் என்கிற தீரன், திரு. ஆ. .. ஆண்டிமடம்

27 இராமசாமி, டாக்டர் வை. .. பண்ருட்டி

28. இராமசாமி, திரு. கே.ஆர். .. திருவாடனை

29. இராமச்சந்திரன், திரு. ஓ.ஆர். .. கம்பம்

30. இராமச்சந்திரன், திரு. சி.இரா. .. தொண்டாமுத்தூர்

31. இராமச்சந்திரன், திரு. மா. .. திருவோணம்

32. இராமலிங்கம், திரு. ஏ. .. காட்டுமன்னார்கோவில்(செ.வ.)

33. இராமலிங்கம், திரு. செ. .. திருவிடைமருதூர்

34. இராமன், டாக்டர் இ.எஸ்.எஸ். .. பள்ளிப்பட்டு

35. இராமஜெயம், திரு. ந.பூ. .. மயிலாப்பூர்

36. இராஜ ரெட்டி, திரு. ச. .. தளி

37. இராஜேந்தர், திரு. டி. .. பூங்கா நகர்

38. இளங்கோ, திரு. கோ. .. அவினாசி (செ.வ.)

39. ஈஸ்வரன், திரு. ரா. .. வாசுதேவநல்லூர் (செ.வ.)

40. உதயசூரியன், திரு. தா. .. சங்கராபுரம்

41. உபயதுல்லா, திரு. எஸ்.என்.எம். .. தஞ்சாவூர்

42. கணேசன், திரு. ஐ. .. எடப்பாடி



43. கணேசன், திரு. கே.சி. .. ஜெயங்கொண்டம்

44. கருணாநிதி, கலைஞர் மு. .. சேப்பாக்கம்

45. கருப்பசாமி, திரு. சொ. .. சங்கரநயினார்கோவில் (செ.வ.)

46. கருப்பண்ண உடையார், திரு. ந. .. பாபநாசம்

47. கருப்புசாமி, திரு. டி. .. உப்பிலியாபுரம் (ஆ.வா.)

48. கன்னையன், திரு. க. .. தொட்டியம்

49. காஞ்சனா கமலநாதன், டாக்டர் .. கிருஷ்ணகிரி

50. காந்தி, திரு. ஆர். .. இராணிப்பேட்டை

51. கிருஷ்ணசாமி, டாக்டர் க. .. ஒட்டப்பிடாரம் (செ.வ.)

52. கிருஷ்ணன், திரு. எஸ்.வி. .. நாங்குநேரி

53. கிருஷ்ணன், திரு. சீ.வெ. .. வேடசந்தூர்

54. குண்டன், திரு. டி. .. உதகமண்டலம்

55. குத்தாலம் பி. கல்யாணம், திரு. .. குத்தாலம்

56. குமாரதாஸ், டாக்டர் தே. .. கிள்ளியூர்

57. கும்மிடிப்பூண்டி கி. வேணு, திரு. .. கும்மிடிப்பூண்டி

58. குழந்தை தமிழரசன், திரு. .. விருத்தாசலம்

59. கோதண்டம், திரு. ஏ. .. ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.)

60. கோபால், திரு. பா. .. மேட்டூர்

61. கோபு, திரு. சி. .. அணைக்கட்டு

62. கோமதி சீனிவாசன், திருமதி .. வலங்கைமான் (செ.வ.)

63. கோவிந்தன், திரு. ப. .. தாரமங்கலம்

64. கோவிந்தன், திரு. வெ. .. பேரணாம்பட்டு (செ.வ.)

65. சக்ரபாணி, திரு. ஆர். .. ஒட்டன்சத்திரம்

66. சண்முகம், திரு. கோ. .. திருப்பத்தூர்
67. சண்முகம், திரு. சி. .. ஆலந்தூர்
68. சண்முகம், திரு. ம. .. கிணத்துக்கடவு
69. சண்முகம் திரு. வி.சி. .. நெல்லிக்குப்பம்
70. சந்தானம், திரு. லா. .. சோழவந்தான்
71. சந்திரசேகரன், திரு. சி. .. சேந்தமங்கலம் (ஆ.வா.)
72. சந்திரசேகரன், திரு. துரை. .. திருவையாறு
73. சமயநல்லூர் எஸ். செல்வராசு, திரு. .. சமயநல்லூர் (செ.வ.)
74. சம்பத், திரு. ஏ.ஜி. .. முகையூர்
75. சரஸ்வதி, திருமதி ஆர். .. தாராபுரம் (செ.வ.)
76. சற்குணபாண்டியன், திருமதி எஸ்.பி. .. டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்
77. சாமிநாதன், திரு. மு.பெ. .. வெள்ளக்கோவில்
78. சிங்காரவேலு, திரு. வி.பி. .. வால்பாறை (செ.வ.)
79. சிவபுண்ணியம், திரு. வை. .. மன்னார்குடி
80. சிவராமன், திரு. ஆர். .. திருப்பத்தூர்
81. சிவராஜ், திரு. ச. .. ரிஷிவந்தியம்
82. சிவலிங்கம், திரு. எஸ்.ஆர். .. பனமரத்துப்பட்டி
83. சிவானந்தம், திரு. ஆர். .. ஆரணி
84. சிவாஜி, திரு. இ.ஏ.பி. .. திருத்தணி
85. சின்னய்யா, திரு. வெ. .. திருமயம்
86. சீனிவாசன், திரு. ஏ.ஆர்.ஆர். .. விருதுநகர்
87. சுகவனம், திரு. இ.ஜி. .. பர்கூர்



88. சுடலைமுத்து, திரு. அ. .. போடிநாயக்கனூர்
89. சுதர்சனம், திரு. டி. .. பூந்தமல்லி
90. சுந்தரம், திரு. க. .. பொன்னேரி (செ.வ.)
91. சுந்தரம், திரு. ந. .. காரைக்குடி
92. சுந்தரம், திரு. பி.ஆர். .. ராசிபுரம்
93. சுந்தர், திரு. கே. .. உத்திரமேரூர்
94. சுப்பராயன், திரு. கே. .. திருப்பூர்
95. சுப்பிரமணி என்கிற சி.சு. மணி, திரு. சி. .. திருவள்ளூர்
96. சுப்பிரமணி, திரு. பி.என். .. ஆற்காடு
97. சுப்பிரமணியன், திரு. அ.லெ. .. திருநெல்வேலி
98. சுப்புலட்சுமி செகதீசன், திருமதி .. மொடக்குறிச்சி
99. சுரேஷ் ராசன், திரு. என். .. கன்னியாகுமரி
100. செங்குட்டுவன், புலவர் பூ.ம. .. மருங்காபுரி
101. செங்கை சிவம், திரு. .. பெரம்பூர் (செ.வ.)
102. செல்வக்குமார், டாக்டர் அ. .. தியாகராய நகர்
103. செல்வம், திரு. ரெ. .. குளித்தலை
104. செல்வராஜ் என்கிற கவிதைப்பித்தன், திரு. .. கொளத்தூர் (செ.வ.)
105. செல்வராஜ், திரு. து. .. உடுமலைப்பேட்டை
106. சேகரன், திரு. ஆர்.ஆர். .. ஓமலூர்
107. சேதுநாதன், திரு. ரா .. திண்டிவனம்
108. சைதை கா. கிட்டு, திரு. .. சைதாப்பேட்டை

109. ஞானசேகரன், டாக்டர் ஆ. .. மேல்மலையனூர்

110. ஞானசேகரன், திரு. சி. .. வேலூர்

111. டேவிட் செல்வின், திரு. எஸ். .. ஸ்ரீவைகுண்டம்

112. தங்கமணி, திரு. கே. .. மானாமதுரை (செ.வ.)

113. தங்கம் தென்னரசு, திரு. .. அருப்புக்கோட்டை

114. தங்கவேலன், திரு. சப. .. கடலாடி

115. தங்கவேல், திரு. அ.ல. .. சேலம்-2

116. தண்டபாணி, திரு. சி.டி. .. கோயம்புத்தூர் மேற்கு

117. தமிழ்க்குடிமகன், முனைவர் மு. .. இளையான்குடி

118. தமிழ்ச்செல்வன், திரு. ஆர். .. அரக்கோணம் (செ.வ.)

119. தமிழ்மணி, திரு. வீ. .. செங்கல்பட்டு

120. தளபதி, திரு. கோ. .. சேடப்பட்டி

121. தனபாலன், திரு. கே.ஆர்.ஜி. .. சேலம்-1

122. தனபால், திரு. வி.ஜி. .. குடியாத்தம்

123. தாமரைக்கனி, திரு. இரா. .. ஸ்ரீவில்லிபுத்தூர்

124. திசைவீரன், திரு. உ. .. பரமக்குடி (செ.வ.)

125. திருஞானசம்பந்தம், திரு. எஸ்.வி. .. பேராவூரணி

126. திருவேங்கடம், திரு. பெ.சு. .. கலசப்பாக்கம்

127. துரைசாமி, திரு. பா. .. வரகூர் (செ.வ.)

128. துரை, திரு. கே. .. திருவெறும்பூர்

129. துரைமுருகன், திரு. .. காட்பாடி

130. தெய்வநாயகம், திரு. எ. .. மதுரை மத்தி

131. தேவராஜன், டாக்டர் மு. .. பெரம்பலூர் (செ.வ.)



132. நடராசன், திரு. ஆ. .. பேரூர்

133. நடராஜன், திரு. த. .. செஞ்சி

134. நயினா முகமது, திரு. கோ. .. கடையநல்லூர்

135. நன்னன், திரு. கொ.வீ. .. செங்கம் (செ.வ.)

136. நாகரத்தினம், திரு. ச. .. கிருஷ்ணராயபுரம் (செ.வ.)

137. நாசர், திரு. ஏ.வி.ஏ. .. புவனகிரி

138. நிஜாமுதீன், திரு. ஜி. .. நாகப்பட்டினம்

139. நேரு, திரு. கா.நா. .. லால்குடி

140. பசும்பொன் தா. கிருட்டிணன், திரு. .. சிவகங்கை

141. பத்மா, டாக்டர் .. நன்னிலம் (செ.வ.)

142. பரணிகுமார், திரு. பா. .. திருச்சிராப்பள்ளி-1

143. பரிதி இளம்வழுதி, திரு. .. எழும்பூர் (செ.வ.)

144. பழனிசாமி, திரு. ஜி. .. திருத்துறைப்பூண்டி (செ.வ.)

145. பழனிவேல் ராஜன், திரு. பி.டி.ஆர். .. மதுரை மேற்கு

146. பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே. .. குறிஞ்சிப்பாடி

147. பன்னீர்செல்வம், திரு. மு. .. சீர்காழி (செ.வ.)

148. பாண்டுரங்கன், திரு. ந. .. பெரணமல்லூர்

149. பாலகிருஷ்ணன், திரு. சோ. .. முதுகுளத்தூர்

150. பாலசுப்பிரமணியன், திரு. எஸ்.என். .. பவானி

151. பாலசுப்பிரமணியன், திரு. ப .. பட்டுக்கோட்டை.

152. பிச்சாண்டி, திரு. கு .. திருவண்ணாமலை

153. புகழேந்தி, திரு. இ. .. கடலூர்

154. புரட்சிமணி, திரு. ச. .. மங்களூர் (செ.வ.)

155. பூவேந்தன், திரு. த. .. பழனி (செ.வ.)

156. பெரியசாமி, திரு. இ. .. ஆத்தூர்

157. பெரியசாமி, திரு. என். .. தூத்துக்குடி

158. பெரியசாமி, திரு. என்.கே.கே. .. ஈரோடு

159. பெரியசாமி, திரு. நா. .. பெருந்துறை

160. பெருமாள், திரு. வி. .. ஏற்காடு (ஆ.வா)

161. பெர்னார்டு, திரு. இரா. .. குளச்சல்

162. பொங்கலூர் நா. பழனிசாமி, திரு. .. சிங்காநல்லூர்

163. பொன்முடி, டாக்டர் க. .. விழுப்புரம்

164. பொன்முடி, திரு. எஸ்.எஸ். .. பல்லடம்

165. பொன்னம்மாள், திருமதி ஏ.எஸ் .. நிலக்கோட்டை (செ.வ.)

166. மகேந்திரன், திரு. இரா. .. நாட்றாம்பள்ளி

167. மணிக்கண்ணன், திரு. ஆ.செ. .. திருநாவலூர்

168. மணி, டாக்டர் அ. .. உளுந்தூர்பேட்டை (செ.வ.)

169. மணி, திரு. கோ.சி. .. கும்பகோணம்

170. மணி, திரு. டி. .. விளவங்கோடு

171. மணி, திரு. ஜி.கே. .. பெண்ணாகரம்

172. மணி நாடார், திரு. எஸ்.எஸ். .. சாத்தான்குளம்

173. மணிமாறன், திரு. இரா. .. திண்டுக்கல்

174. மணிவர்மா, திரு. க. .. தண்டராம்பட்டு



175. மதிவாணன், திரு. இரா. .. இராயபுரம்

176. மதிவாணன், திரு. செ. .. அச்சரப்பாக்கம் (செ.வ.)

177. மனோகரன், திரு. கு. .. தருமபுரி

178. மாயவன், திரு. தி.ப. .. ஸ்ரீரங்கம்

179. மாரி அய்யா, திரு. பே. .. புதுக்கோட்டை

180. மாரிமுத்து, திரு. அ. .. வானூர் (செ.வ.)

181. முகம்மது இஸ்மாயில், திரு. எஸ்.எஸ். .. அரவக்குறிச்சி

182. முகம்மது கோதர் மைதீன், திரு. .. பாளையங்கோட்டை

183. முத்து, திரு. வி. .. சங்கரி (செ.வ.)

184. முபாரக், திரு. பா.மு. .. கூடலூர்

185. முருகேசன், திரு. பொ. .. காஞ்சிபுரம்

186. முல்லைவேந்தன், திரு. வ. .. மொரப்பூர்

187. முனிரத்தினம், திரு. ஆ.மு. .. சோளிங்கர்

188. மூக்கப்பன், திரு. இரா. .. சின்னசேலம்

189. மூக்கையா, திரு. எல். .. பெரியகுளம்

190. மோகனதாசன், திரு. கோ. .. பூம்புகார்

191. மோகன் கந்தசாமி, திரு. ப. .. பொங்கலூர்

192. மோசஸ், டாக்டர் எம். .. நாகர்கோவில்

193. ரங்கநாதன், திரு. எம். .. குன்னூர் (செ.வ.)

194. ரங்கநாதன், திரு. ப. .. புரசைவாக்கம்

195. ரவி அருணன், திரு. கே. .. தென்காசி

196. ரவிசங்கர், திரு. கு. .. விளாத்திகுளம்

197. ராசேந்திரன், திரு. ஏ. .. போளூர்

198. ராணி, செல்வி க. .. தலைவாசல் (செ.வ.)

199. ராமசாமி, திரு. ஏ.எம். .. ஆத்தூர்

200. ராமச்சந்திரன், திரு. செ. .. திருப்பரங்குன்றம்

201. ராஜு, திரு. எஸ். .. பொள்ளாச்சி

202. ராஜேந்திரன், திரு. எஸ்.கே. .. சத்தியமங்கலம்

203. ராஜ்குமார் மன்றாடியார், திரு. என்.எஸ். .. காங்கேயம்

204. லட்சமணன், திரு. வி.கே. .. கோயம்புத்தூர் கிழக்கு

205. வாசகி முருகேசன், திருமதி .. கரூர்

206. விசுவநாதன், திரு. இரா. .. நத்தம்

207. விஜயகுமார், திரு. கே.எம். .. சாத்தூர்

208. விஜயன், திரு. டி.சி. .. திருவொற்றியூர்

209. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், திரு. .. வீரபாண்டி

210. வீரப்பன், திரு. கே.கே. .. கபிலர்மலை

211. வெங்கடசாமி, திரு. பி. .. [illegible]

212. வெங்கடாசலம், திரு. அ. .. ஆலங்குடி

213. வெங்கடாசலம், திரு. ஜி.எல். .. பாலக்கோடு

214. வெங்கடேசன், திரு. ச.க. .. மதுராந்தகம்

215. வெங்கடேசன், திரு. பி.வி.எஸ். .. காவேரிப்பட்டினம்

216. வெங்கிடு, திரு. ஜி.பி. .. கோபிச்செட்டிப்பாளையம்

217. வேடம்மாள், திருமதி ஏ. ஆர் .. அரூர் (செ.வ.)

218. வேதரத்தினம், திரு. எஸ்.கே. .. வேதாரண்யம்

219. வேலாயுதன், திரு. சி. .. பத்மநாபபுரம்



20. வேலுசாமி, திரு. வ. .. மதுரை கிழக்கு

21. வேல்சாமி, திரு. க. .. நாமக்கல் (செ.வ.)

22. வேல்துரை, திரு. பா. .. சேரன்மகாதேவி

'23. வைத்தியலிங்கம், திரு. மீ.அ. .. தாம்பரம்

124. ஜெனிபர் சந்திரன், திருமதி எஸ். .. திருச்செந்தூர்

225. ஜோதிகண்ணன், திரு. மு.ந. .. முசிறி

226. ஸ்டாலின், திரு. மு.க. .. ஆயிரம் விளக்கு

227. ஹேமச்சந்திரன், திரு. ஜே. .. திருவட்டாறு

228. ஆன் டி' மான்டி, திருமதி .. நியமனம்

229. (வெற்றிடம்) .. அறந்தாங்கி

230. (வெற்றிடம்) .. உசிலம்பட்டி

231. (வெற்றிடம்) .. சிவகாசி

232. (வெற்றிடம்) .. திருப்போரூர் (செ.வ.)

233. (வெற்றிடம்) .. திருமங்கலம்

234. (வெற்றிடம்) .. திருவல்லிக்கேணி

235. (வெற்றிடம்) .. மயிலாடுதுறை

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்**

திரு. கே.வி. வெங்கடபதி .. அரசு தலைமை வழக்கறிஞர்

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## தை 7, விக்கிரம — திருவள்ளுவர் ஆண்டு 2032

## 2001 ஜனவரி 20, சனிக்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன் அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான்உறையும்

தெய்வத்துள் வைக்கப் படும்."

தெய்வத்துக்கென எத்தனையோ அருங்குணங்கள் கூறப்படுகின்றன. உலகில் வாழ வேண்டிய அறநெறியில் நின்று வாழ்கிறவன் வானில் வாழ்வதாகச் சொல்லப்படும் தெய்வத்துக்கு இணையாக வைத்து மதிக்கப்படுவான்.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 1. இரங்கல் குறிப்புகள்

### முன்னாள் உறுப்பினர்கள் மறைவு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினர்களான திரு. செ. குப்புசாமிஅவர்கள் 10-11-2000 அன்றும், திரு. த. சோணையா அவர்கள் 9-12-2000 அன்றும், திரு. வ. சின்னசாமி அவர்கள் 11-12-2000 அன்றும், திரு. கே.என். குமாரசாமி அவர்கள் 9-1-2001 அன்றும் மறைவுற்றதை இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. செ. குப்புசாமி அவர்கள் 1980-84 ஆம் ஆண்டுகளில் வந்தவாசி தனித் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, செவ்வனே பணியாற்றியுள்ளார்கள்.

222789

[பேரவைத் தலைவர்] [2001 ஜனவரி 20

திரு. த. சோணையா அவர்கள், 1971-76 ஆம் ஆண்டுகளில் மானாமதுரை தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சீரிய முறையிலே பணியாற்றியுள்ளார்கள்.

திரு. வ. சின்னசாமி அவர்கள் 1967-71 மற்றும் 1971-76 ஆம் ஆண்டுகளில் ஏற்காடு தனித் தொகுதியிலிருந்து தொடர்ந்து இருமுறை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, பாராட்டத்தக்க வகையில் பணியாற்றியுள்ளார்கள்.

திரு. கே.என். குமாரசாமி அவர்கள் 1967-71 மற்றும் 1971-76 ஆம் ஆண்டுகளில் பல்லடம் தொகுதியிலிருந்து தொடர்ந்து இருமுறை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, போற்றத்தக்க வகையிலே பணியாற்றியுள்ளார்கள்.

இந்த முன்னாள் உறுப்பினர்களின் மறைவால் அவர்களைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தினையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மறைவுற்ற இப்பெரியவர்களுக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, ஒரு நிமிடம் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

*(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று ஒரு நிமிடம் அமைதி காத்தனர்.)*

## 2. இரங்கல் தீர்மானம்

### பேரவை உறுப்பினர் திரு. எம்.எம்.எஸ். அபுல்ஹசன் மறைவு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நம்முடைய சட்டமன்றத்தின் மூத்த உறுப்பினரும், நம்முடைய மரியாதைக்குரியவருமான மயிலாடுதுறை தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. எம்.எம்.எஸ். அபுல்ஹசன் அவர்கள் நேற்றையதினம் மறைந்துவிட்டார்கள் என்ற செய்தியை உங்களுக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன். அவர்கள் மறைவு குறித்த இரங்கல் தீர்மானத்தை மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களை முன்மொழியுமாறு அழைக்கின்றேன்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரங்கல் தீர்மானம்:



2001 ஜனவரி 20] [பேராசிரியர் க. அன்பழகன்]

"இனிய பண்பும், எளிமையும், அடக்கமும் கொண்டு அனைத்துத் தரப்பினரிடமும் நட்புணர்வோடு திகழ்ந்தவரும், 1991-96, 1996-2001 ஆகிய ஆண்டுகளில் மயிலாடுதுறை தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தொடர்ந்து இருமுறை தேர்ந்தெடுக்கப்பட்டு, சீரிய முறையில் பணியாற்றியவருமான திரு. எம்.எம்.எஸ். அபுல்ஹசன் அவர்கள் 19-1-2001 அன்று மறைவுற்ற செய்தி அறிந்து இப்பேரவை பெரும் அதிர்ச்சியும், ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது. அவரது மறைவினால் அவரைப் பிரிந்து வருந்தும் குடும்பத்தினர்க்கும் அவர் சார்ந்த இயக்கத்திற்கும் இப்பேரவை தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறது."

*முற்பகல் 9-35*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவை முன்னவர் பேராசிரியர் அவர்கள் முன்மொழிந்த தீர்மானத்தின் வழியில் சில கருத்துக்களை கண்ணீரோடு கலந்து கூறிட நின்றுகொண்டிருக்கின்றேன். இந்த அவையினுடைய மூத்த உறுப்பினர்களில் ஒருவரும், என்னுடைய நெருங்கிய நண்பரும், பொது வாழ்க்கையிலே நீண்டகால அனுபவம் வாய்ந்தவரும், பொதுமக்களுடைய செல்வாக்கை நிரம்பப் பெற்றவருமான மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய அபுல்ஹசன் அவர்கள் மறைந்துவிட்டார்கள் என்ற செய்தி பெரும் மனத் துயரத்திற்கு நம்மையெல்லாம் உள்ளாக்கியிருக்கின்றது.

அவர்கள் சட்டமன்ற உறுப்பினராக இருந்து ஆற்றிய பணிகள் மாத்திரமல்ல, மயிலாடுதுறையினுடைய நகராட்சி மன்றத் தலைவராக இருந்து ஆற்றிய பணிகளும் என்றென்றும் மறக்க இயலாதவை. அவர்கள் அந்த மன்றத்தினுடைய தலைவராக இருந்து பணியாற்றிய காலத்தில் எல்லாம் ஆட்சிப் பொறுப்பிலேயிருந்த வாய்ப்பு எனக்கு இருந்த காரணத்தினால், அவர்கள் விடுத்த எந்த வேண்டுகோளையும் அலட்சியப் படுத்தாமல், மயிலாடுதுறை நகராட்சிக்குத் தேவையான அத்தனை காரியங்களையும் நான் செய்துகொடுத்தேன் என்பதுதான் அவரை

[கலைஞர் மு. கருணாநிதி] [2001 ஜனவரி 20

இழந்திருக்கிற நேரத்தில் எனக்கு ஏற்பட்டுள்ள கடுகளவு ஆறுதல் என்பதை இங்கே கூற விரும்புகின்றேன்.

அவர்கள் இந்த அவையிலே எத்தனையோ முறை பேசியிருக்கின்றார்கள். எதிர்க்கட்சி வரிசையிலே இருந்து அவர்கள் பேசுகின்றார்கள் என்றாலும்கூட, அவர்களுடைய நியாயமான வாதங்களை எந்தவொரு நேரத்திலும் ஆத்திரவயப்பட்டவராக எடுத்து வைத்தவர் அல்ல. எல்லோரும் சிரிக்கத்தக்க அளவிற்கு, அவரால் யார் தாக்கப்படுகிறார்களோ அவர்களேகூட சேர்ந்து சிரிக்கின்ற அளவிற்கு, அவ்வளவு இலாவகமாக தன்னுடைய பேச்சை அமைத்துக்கொண்டு உரையாற்றக்கூடிய திறமை பெற்றவர் மறைந்த அபுல்ஹசன் அவர்கள் ஆவார்கள்.

தஞ்சை மாவட்டத்தில் நான் கலந்துகொள்கின்ற பல நிகழ்ச்சிகளில், குறிப்பாக திருமண நிகழ்ச்சிகளில் அல்லது பொது நிகழ்ச்சிகளில் அல்லது அரசு நிகழ்ச்சிகளில் எல்லாம் அவரும் கலந்துகொண்டு ஆற்றிய உரைகள் எல்லாம் அரசுக்கு ஆலோசனை சொல்கின்ற உரைகளாகவும், ஆட்சி செய்கின்ற நற்காரியங்களை மேலும் ஊக்கப்படுத்துகின்ற உரைகளாகவும் அமைந்ததை என்னால் என்றைக்குமே மறக்க முடியாது.

இஸ்லாமியச் சமுதாயத்திலே, இனிய இயல்பும், இணையற்ற தொண்டுள்ளமும் கொண்டு வாழ்ந்த ஒரு நல்லவரை, வல்லவரை நாம் இப்போது இழந்திருக்கின்றோம். எனக்கு அவர் எவ்வளவு பெரிய நெருங்கிய நண்பர் என்பதை தஞ்சை மாவட்டத்திலுள்ள எல்லாக் கட்சிகளிலே உள்ளவர்களும் மிக நன்றாக அறிவார்கள்.

நேற்றையதினமே நான் சொன்னேன். தங்களிடமும், எதிர்க்கட்சித் தலைவர் அவர்களிடமும், "இன்று காலையிலே எனக்கு வேறு ஒரு முக்கியமான நிகழ்ச்சி இருக்கிறது, ஆகவே இன்று அவைக்கு நான் தாமதமாக வருவேன், மன்னித்துக்கொள்ளுங்கள்" என்று நேற்றைக்கே நான் தங்கள் அறையிலே கேட்டுக்கொண்டேன். இருந்தாலும்கூட, இந்த நிகழ்ச்சிக்கு, அவருக்கு அனுதாபம் தெரிவிக்கின்ற இந்த நிகழ்ச்சிக்கு நான் வராமல் இருக்கக்கூடாது என்பதற்காக, நான் ஒத்துக்கொண்ட நிகழ்ச்சியை ஒரு மணி நேரம் தள்ளிவைத்துவிட்டு வந்ததற்குக் காரணமே, அவருக்கும் எனக்கும் உள்ள நட்புதான் என்பதைத் தெரிவிக்க விரும்புகின்றேன். அந்த அளவிற்கு என்னுடைய



2001 ஜனவரி 20] [கலைஞர் மு. கருணாநிதி]

உள்ளத்தில் ஆழமாகப் பதிந்துவிட்ட அந்த உருவம், இனி இந்த அவையிலே இடம்பெறாது என்பதையும், இந்த அவையிலே இடம்பெறாவிட்டாலும்கூட, என்னுடைய அகத்திலே, உள்ளத்திலே என்றென்றும் இடம் பெறக்கூடிய உருவம் என்பதையும் இங்கே நினைவுபடுத்தி, அவரை இழந்து வாடுகின்ற தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியினுடைய உறுப்பினர்களுக்கும், தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் திரு. மூப்பனார் அவர்களுக்கும், அபுல்ஹசன் அவர்களுடைய குடும்பத்தாருக்கும், உற்ற நண்பர்களுக்கும், உறவினர்களுக்கும் என் சார்பிலும், தமிழகத்தின் சார்பிலும் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்து, அமைகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் முன்மொழிந்த இரங்கல் தீர்மானத்தோடு, தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் சார்பாக, எங்களுடைய கட்சியின் சட்டமன்ற உறுப்பினர் திரு. எம்.எம்.எஸ். அபுல்ஹசன் அவர்களுடைய மறைவிற்கு எங்களுடைய இரங்கலையும் இணைத்துக்கொள்ள விரும்புகிறோம்.

*முற்பகல் 9-40*

நேற்று மாலை ஏழரை மணி அளவில், அபுல்ஹசன் அவர்கள் தங்கியிருந்த அரசு மருத்துவமனையில் அவரைப் பார்க்கப் போகலாம் என்ற எண்ணத்தோடு நானும், சில சட்டமன்ற உறுப்பினர்களும் அங்கு சென்றிருந்தோம். ஏதோ முதுகுத் தண்டு வலியினாலே அவர் பாதிக்கப்பட்டு அங்கே சிகிச்சை பெற்று வருகிறார் என்பது மட்டும்தான் எங்களுக்குத் தெரிந்திருந்த உண்மை. ஆனால், அங்கே போய்ப் பார்த்தபோது திடீரென்று அவருக்கு இரத்த அழுத்தம் குறைந்ததாகவும், அதனால் நாடித் துடிப்பு குறைந்ததாகவும் அங்கேயிருந்த மருத்துவர்கள் அறிவித்தார்கள். நான் அவர்களைப் பார்த்து 'அவர் உயிர் பிழைப்பதற்கு வாய்ப்பு இருக்கிறதா' என்று கேட்டேன். 'நிச்சயமாக இல்லை' என்று அவர்கள் அப்போதே சொல்லிவிட்டார்கள். அதைக் கேட்டு நாங்கள் அனைவரும் பெரிதும் அதிர்ச்சி அடைந்தோம். நான் உடனே மக்கள் தலைவர் ஐயா மூப்பனார் அவர்களுக்கு தொலைபேசியின் மூலமாக இந்த நிலைமையை எடுத்துக் கூறினேன்.

[திரு. வி.கே. லட்சுமணன்] [2001 ஜனவரி 20

அவர்கள் மருத்துவமனைக்கு வந்து, அவருடைய நீண்டகால நண்பருடைய அந்த மறைவினைத் தாங்கொணாத் துயரத்தோடு கண்டு சென்றார்கள்.

அதுமட்டுமல்லாமல், இன்றையதினம் தமிழ் மாநில காங்கிரஸைச் சார்ந்த எங்களுடைய சட்டமன்ற உறுப்பினர்கள் அவருக்கு இறுதி மரியாதை செலுத்துவதற்காக அதிராமபட்டினத்திற்குச் சென்றிருக்கிறார்கள்.

முதல்வரவர்கள் தெரிவித்ததுபோல, எம்.எம்.எஸ். அபுல்ஹசன் அவர்கள் மிகச் சிறந்த பண்பாளர். நகர மன்றத் தலைவராக, வக்ஃப் போர்டு உறுப்பினராக பல்வேறு நிலைகளிலே சமுதாயப் பணியாற்றியவர். இன்முகத்தோடு பழகக் கூடியவர். ஏறத்தாழ பத்தாண்டு காலம் இந்த மாமன்றத்திலே உறுப்பினராக இருந்து, பொது மக்களுக்காகச் சிறந்த பணியாற்றியவர். அவரை இழந்து வாடுகிற அவருடைய குடும்பத்தாருக்கு தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் சார்பாக எங்களுடைய ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, எம்.எம்.எஸ். அபுல்ஹசன் அவர்களுடைய மறைவு குறித்து மாண்புமிகு பேரவை முன்னவரவர்கள் முன்மொழிந்த இரங்கல் தீர்மானத்தில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக நான் இரங்கலைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மறைந்த மாண்புமிகு சட்டப் பேரவை உறுப்பினர் அபுல்ஹசன் அவர்கள் தொடர்ந்து பத்தாண்டு காலம் இந்த மாமன்றத்திலே இருந்து, சிறந்த முறையிலே செயலாற்றியவர்கள். அவர் ஒரு தேசியக் குடும்பத்தில் வளர்ந்தவர். அவர் மட்டுமல்ல, அவருடைய குடும்பத்தைச் சார்ந்தவர்களும் காங்கிரஸ் இயக்கத்தில் மிகவும் ஈடுபாடு கொண்டவர்கள்.

அதோடு மட்டுமல்லாமல், தஞ்சை மாவட்டத்திலே எம்.எம்.எஸ். கல்லூரி நிறுவனத்தை நிறுவிய குடும்பத்தைச் சார்ந்தவர். அந்தப் பகுதியிலே இருக்கிற பிற்படுத்தப்பட்ட மக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள், மீனவர்கள் படித்து முன்னேறியிருக்கிறார்கள் என்று சொன்னால்,



2001 ஜனவரி 20] [திரு. ஜி. பழனிசாமி]

அபுல்ஹசன் அவர்களுடைய குடும்பத்தால் நிறுவப்பட்டிருக்கிற அந்த அதிராமபட்டினம் கல்லூரிதான் அந்தப் பகுதி மக்களுக்கு ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தியது. காமராஜர் காலத்திலேயே அந்தக் கல்லூரியைத் தொடங்கி, அந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய ஏழையெளிய மக்களுக்கு, எந்த ஒரு பண வசதியும் இல்லாமல் இருந்தாலும்கூட அவர்களெல்லாம் படிப்பதற்கு ஒரு வழிவகை செய்து, வழிவகுத்துக் கொடுத்திருக்கின்ற குடும்பத்தைச் சார்ந்தவர். மிகப் பெரிய குடும்பம். இருந்தபோதிலும்கூட அனைவரும் தேசிய இயக்க உணர்வோடு செயல்படக்கூடியவர்கள். இவரும்கூட சட்டப் பேரவை உறுப்பினராக இருந்த காலத்திலும் சரி, காங்கிரஸ் கட்சியினுடைய பேரியக்கத்திலே ஈடுபட்ட காலத்திலும் சரி, ரொம்ப மென்மையான முறையிலே அவர் பணியாற்றுவதை, பேசுவதைப் பார்த்தோம். மக்களிடத்திலே அவர் பழகுகிற அந்தப் பண்பு, அவருடைய செயல்பாடுகள் மற்றவர்கள் உணரக்கூடிய அளவிற்கு அமைந்திருக்கும். ஒரு கடினமான வார்த்தையைக்கூட அவர் சொல்லியது கிடையாது.

சமீபத்திலேகூட Train-லே நாங்கள் வருகிறபோது அவர் என்னிடத்திலே பேசிக்கொண்டு வருகிறபோது, மக்கள் எதிர்பார்ப்புகளுக்கேற்ப நம்முடைய வேலைகளை இன்னும் வேகப்படுத்த வேண்டிய அவசியம் இருக்கிறது என்று சொன்னார். வயதான நேரத்திலேகூட, அவர் தன்னுடைய பணிகளைப் பூர்த்தி செய்ய முடியவில்லையே என்ற கவலை இருக்கிறது என்று வருத்தத்தோடு கூறினார். இப்படிப்பட்ட ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர். பிறகு தமிழ் மாநில காங்கிரஸ் கட்சி இயக்கத்திலே தன்னை இணைத்துக்கொண்ட பின்னாலும், மயிலாடுதுறையிலே மீண்டும் ஒருமுறை சட்டப் பேரவை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னால் அவர் சிறந்த முறையிலே மக்களுடைய சேவையிலே செயலாற்றியிருக்கிறார். அவர் மறைவினால் வருந்துகின்ற அவர்தம் குடும்பத்திற்கும், அவர் சார்ந்திருக்கிற தமிழ் மாநில காங்கிரஸ் இயக்கத்திற்கும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக ஆறுதலையும், ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்துக்கொண்டு, அமர்கிறேன்.

*முற்பகல் 9-45*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம்.

[2001 ஜனவரி 20

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மயிலாடுதுறை சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் திரு. அபுல்ஹசன் அவர்கள் நேற்றைக்கு அகால மரணமுற்றிருக்கிறார்கள். அவர்களுடைய மரணத்திற்கு எனது சார்பிலும், எங்களது கட்சியின் சார்பிலும் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அவர்களைப் பொறுத்தவரையில் இந்த இயக்கத்தில் இருப்பதற்கு முன்பாக தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவர் பதவியில் பணியாற்றியிருக்கின்றார்கள். அந்தக் கட்சியினுடைய பொதுச் செயலாளராகவும் பணியாற்றியிருக்கின்றார்கள். அவர்கள் மயிலாடுதுறை நகரசபையினுடைய தலைவராக ஐந்தாண்டு காலம் சிறப்பாகப் பணியாற்றியிருக்கின்றார்கள். சிறுபான்மை இனத்தவராக இருந்தாலும், அவர்கள் பலதரப்பு மக்களிடமும் இனிய முறையிலே பழகக்கூடிய நல்ல இயல்பு கொண்டவர்கள் ஆவார்கள்.

வக்ஃபு வாரியத்தினுடைய உறுப்பினராக அவர்கள் இருந்திருக்கின்றார்கள். நாங்கள் எல்லாம் பழகும்போது வயது வித்தியாசம் இல்லாமல் எங்களிடம் மிகவும் அன்பாகப் பழகக்கூடியவர்கள். அவர்கள் இந்தச் சட்டமன்றத்திலே தன்னுடைய தொகுதியினுடைய பிரச்சினைகளை மிகவும் அமைதியாக, ஆரவாரம் இல்லாமல், அழுத்தமாகப் பேசியுள்ளார்கள். அவர்களுடைய மறைவுக்கு எனது சார்பிலும், எங்களது கட்சியின் சார்பிலும் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் திரு. அபுல்ஹசன் அவர்கள் நேற்று அகால மரணம் அடைந்ததைக் கேள்விப்பட்டு எங்களுடைய பாட்டாளி மக்கள் கட்சி மிகுந்த வேதனை அடைகிறது. அன்னார் அவர்கள் மயிலாடுதுறையிலே 5 ஆண்டு காலம் நகராட்சியிலே தலைவராகப் பணியாற்றிய சிறப்பினை நம்முடைய முதல்வர் அவர்கள் எவ்வாறு அழகாகப் பாராட்டினார்கள் என்பது இந்த அவையில் உள்ள அத்தனை உறுப்பினர்களுக்கும் மிக நன்றாகத் தெரியும். நம்முடைய முதல்வர்மீது என்றென்றும் பற்றும் பாசமும் வைத்திருந்த ஒரு சிறுபான்மை சமுதாயத்தைச் சேர்ந்த ஒரு நல்ல சட்டமன்ற



2001 ஜனவரி 20] [திரு. ஐ. கணேசன்]

உறுப்பினரை இந்த அவை இழந்துவிட்டதை எண்ணும்போது மிகவும் வேதனையாக இருக்கிறது.

இரண்டு முறை சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட நல்லவர், வல்லவர். அரசியலிலே தூய்மையையும், நேர்மையையும் கடைப்பிடித்த உத்தமர் அவர். இந்த அவையிலே யாரிடத்திலேயும் கண்ணியமிக்க முறையிலே பேசக்கூடியவர். பெரியவர், சிறியவர் என்று பார்க்காமல் அன்போடு பழகக்கூடிய ஒரு நல்ல இதயத்திற்கு சொந்தக்காரர், ஒரு நல்ல மனிதர் இன்று நம்மிடையே இல்லை என்பதை எண்ணும்போது எங்களுடைய பாட்டாளி மக்கள் கட்சி இயக்கம் மிகுந்த வேதனை அடைகிறது. அவருடைய குடும்பத்தாருக்கு எங்களுடைய இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ம. அப்துல் லத்தீப்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்மோடு நேற்று வரையில் இந்த அவையில் உறுப்பினர், நண்பர், நல்லவர் என்ற முறையில் பழகிக்கொண்டிருந்த மயிலாடுதுறை சட்டப் பேரவைத் தொகுதி உறுப்பினர், அருமைச் சகோதரர் எம்.எம்.எஸ். அபுல்ஹசன் அவர்கள் மறைந்துவிட்டார்கள் என்பது நம் அனைவருக்கும் பெரும் துயரை ஏற்படுத்தியிருக்கிறது. இனிய சொல்லுக்கும், இன்முகத்திற்கும் சொந்தக்காரராக இருந்த, பெருநோக்கும் பொதுநோக்கும் உடைய ஒரு பெருந்தகை இந்த அவையில் நம் அனைவருடைய அன்பையும் பெற்றவர் ஆவார். நல்ல கருத்துக்களை நிதானமாகச் சொல்லக்கூடியவர். காங்கிரஸ் கட்சியில் அவர்கள் அழுத்தமான ஈடுபாடு கொண்டிருந்தவர்கள். அந்தக் கட்சிக்காக ஆழமாக சிந்தித்து உழைத்தவர்கள். அதுமட்டுமல்லாமல் அவர் எப்படி பொது மக்களுடைய நன்மதிப்பை, பிறந்த இடத்திலே மட்டுமல்ல, புகுந்த இடத்திலேயும் பெற்றிருந்தார் என்பதற்கும், வாணிபத்திற்காக மயிலாடுதுறையில் குடியேறி அங்கேயே அவர் நிலைத்து, அந்த நகரின் நகராட்சித் தலைவராகவும் ஏற்றம் பெற்றார் என்றால் அவர் எவ்வளவு தூரம் எல்லா உணர்வுகளுக்கும் அப்பாற்பட்டுச் செயல்பட்டார், அவரை மக்கள் எப்படி எல்லா உணர்வுகளுக்கும் அப்பாற்பட்டு ஆதரித்தார்கள் என்பதற்குத் அதுவே ஒரு சிறந்த விளக்கமாகும்.

[திரு. ம. அப்துல் லத்திப்] [2001 ஜனவரி 20

*முற்பகல் 9-50*

மயிலாடுதுறையினுடைய நகராட்சி மன்றத் தலைவராக அவர்கள் பணியாற்றிய பாங்கினை இங்கே இரங்கல் உரையாற்றிய மாண்புமிகு முதல்வர் அவர்கள் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். மக்களோடு பழகுவது, தனக்காக மட்டுமல்லாமல், நாட்டுக்காகவும் பழகும்போது அது நல்லுணர்வுகளை ஏற்படுத்துகிறது. அந்த நல்லுணர்வுதான் நாட்டில் பொதுவாழ்வுக்கே அணி சேர்க்கிறது, ஆக்கம் அளிக்கிறது, ஊக்கம் அளிக்கிறது என்பதற்கு திரு. அபுல்ஹசன் அவர்களுடைய வாழ்வு ஒரு சிறந்த எடுத்துக்காட்டு என்பதை அவரோடு பழகிய காரணத்தினால் முதல்வர் அவர்கள் இங்கே தெளிவாக எடுத்துக்கூறியிருக்கிறார்கள்.

சிறுபான்மையோ, பெரும்பான்மையோ, ஆனால் பெருநோக்கு இருக்க வேண்டும், பொதுத் தன்மை இருக்கவேண்டும், அதிலே ஒரு பொதுநோக்கும் இருக்க வேண்டும். அப்படி இருந்தால், அது பொது வாழ்வைச் சிறக்கச் செய்யும். பொது வாழ்விற்காகத் தம்மை அர்ப்பணித்து வாழ்கின்றவர்களையும் அது உயர்த்தும். அவர்கள் மறைந்துவிட்டாலும், அவர்கள் மக்களுடைய எண்ணங்களிலும், உள்ளங்களிலும் இடம் பெற்றவர்களாகத் திகழ்வார்கள் என்பதற்கு எடுத்துக்காட்டாக, மறைந்த நம்முடைய அருமை நண்பர் திரு. அபுல்ஹசன் அவர்கள் திகழ்ந்தார்கள். இரண்டு முறை அவர்கள் இந்த அவையிலே உறுப்பினராக இருந்திருக்கிறார்கள். நேற்றையதினம் மருத்துவமனையில் அவருடைய பூதவுடலைப் பார்க்கச் சென்றபோது அவருக்குப் பக்கத்திலேயே அமர்ந்திருந்த நம்முடைய மரியாதைக்குரிய திருமதி பொன்னம்மாள் அவர்கள், 'அவர் இல்லை என்ற ஓர் ஏக்கம் எனக்கு இருக்கும்; எப்போதுமே எனக்கு உறுதுணையாக இருந்தவர்கள்; எனக்கு உற்சாகத்தைத் தந்தவர்கள்; இன்றைக்கு நான் திரும்பிப் பார்க்கும்போது அந்த இடம் வெற்றிடமாக இருந்தால், எனக்கே ஒரு வெற்றிடமாகக் கருதுவேன்' என்று கண்ணீர் மல்கக் கூறினார்கள். அப்படி அவர்கள் சொன்னபோது நான்கூட நெகிழ்ந்து போனேன். எனக்குத் தனிப்பட்ட முறையில் திரு. அபுல்ஹசன் அவர்கள் நண்பர், ஒரு சகோதரர். நல்ல தேசப் பற்றுடையவர், கட்சிப் பற்றுடையவர். அதேநேரத்தில் சமயப் பற்றும் உடையவர். தேசப் பற்றில் எவ்வளவு அழுத்தமாக இருந்தாரோ, அதைப்போலவே அவர், தான் சார்ந்துள்ள சமயப் பற்றிலும் மிக உயர்ந்து, நிலைத்து இருந்தார் என்பதை நான்



2001 ஜனவரி 20] [திரு. ம. அப்துல் லத்திப்]

நன்றாக அறிவேன். ஒவ்வொருவரும் அவரவர்களுடைய தனித் தன்மையை, தனி எண்ணங்களை, உணர்வுகளைப் போற்றுகிறார்கள். அதே நேரத்தில் அந்த உணர்வு மற்றவர்களுக்கும் உண்டு என்பதை ஏற்றுக்கொள்கிறார்கள். அப்படி ஒரு நிலைதான் இன்றைக்கு நாட்டிற்குத் தேவை. அந்த உணர்வுகளைப் பெற்றிருந்தவர்களிலே திரு. அபுல்ஹசன் அவர்களும் ஒருவர். அவர் இல்லாமல் போனது ஒரு குறையாக இருக்கிறது. இருந்தாலும், இதிலே இருந்து யாரும் தப்ப முடியாது. இந்த அவையிலே, இந்தச் சட்டமன்றத்திலே-- பதினோராவது சட்டமன்றத்திலே, எவ்வளவு பேர் போய்விட்டார்கள். அவர்களை எல்லாம் நாம் எண்ணிப் பார்க்கிறோம். இது கடைசிக் கூட்டம், இந்தச் சட்டமன்றத்தினுடைய கடைசிக் கூட்டம். இந்தக் கூட்டத்தில் கடைசியாக நிறைவேற்றுகிற ஓர் அனுதாபத் தீர்மானமாக இது இருக்கவேண்டும் என்று நான் இறைவனை வேண்டிக் கொள்கின்றேன். எங்கிருந்து வந்தோம், எங்கே போகிறோம் என்று தெரியாத நிலையில், இடைக்காலத்தில் சில ஆண்டுகள் வாழ்கிற மனிதன், மனித சமுதாயத்தினுடைய மாண்பை உயர்த்தி, அவன் மறைந்தாலும், மனித மாண்பு மறையவில்லை என்ற நிலையில் யார் தன்னை இனங்காட்டிக் கொள்கிறார்களோ, அவர்கள் வரலாற்றில் இடம் பெறுகிறார்கள்.

*முற்பகல் 9-55*

திரு. அபுல்ஹசன் அவர்களுடைய குடும்பத்தினர்க்கு, அவர்களுடைய கட்சிக்கு, கட்சியின் தலைவர், மக்கள் தலைவர் ஐயா மூப்பனார் அவர்களுக்கு, அந்தக் கட்சியைச் சார்ந்த உறுப்பினர்களுக்கெல்லாம் நான் என்னுடைய இரங்கலை என்னுடைய சார்பாகவும், இந்திய தேசிய லீக் கட்சியின் சார்பாகவும் தெரிவித்துக்கொள்வதோடு, குடும்ப நண்பர், என்னுடைய நெருங்கிய நண்பர், நீண்ட கால நண்பர் என்ற அடிப்படையில் நானும் இந்தத் துயரத்தை அவருடைய குடும்பத்தோடு சமமாகப் பகிர்ந்துகொள்கிறேன் என்பதையும் தெரிவித்து, அந்தக் குடும்பத்தாருக்கு என்னுடைய இரங்கலைத் தங்கள் மூலமாகத் தெரிவித்து அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜே. ...

[2001 ஜனவரி 20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜே. ஹேமச்சந்திரன்.

***திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நல்ல மனிதரை, ஒரு சிறந்த மனிதரை நாம் இழந்து இருக்கிறோம். சுருங்கிய காலமாக இருந்தாலும் பொதுக் நிறுவனங்கள் குழு உறுப்பினர் என்ற முறையில் நான் அவரோடு பழகுவதற்கும், மக்கள் நலனில், பொது விஷயங்களில் அவர் எவ்வளவு அக்கறை உள்ளவர் என்று தெரிந்துகொள்ளுவதற்கும் முடிந்தது. அபுல்ஹசன் கடைசி காலத்திலே அவரால் தனியாகக் கூட்டங்களுக்கு வர முடியவில்லை என்ற காரணத்தினால் அவருடைய மகனையும் அழைத்துக்கொண்டு அவர் கூட்டங்களுக்கு வந்து, கூட்டங்களிலே மிக அக்கறையோடு கலந்து கொண்டிருந்த நிலையில், அந்த நேரங்களிலேயெல்லாம் எங்களோடு அன்போடு பழகுகிற வாய்ப்பை நாங்கள் அனுபவித்து இருக்கிறோம். அப்படி நன்கு பழகுகிற ஒரு தலைவரை, மக்களுக்காகத் தன்னுடைய வாழ்நாளில் பல வருடங்கள் சிறந்த முறையிலே உழைத்த ஒருவரை நாம் இன்றைக்கு இழந்திருக்கிறோம். அவருடைய இழப்பால் வாடிக் கொண்டிருக்கிற தமிழ் மாநில காங்கிரஸ் கட்சிக்கும், அதேபோன்று அவருடைய குடும்பத்தாருக்கும், அவருடைய ஊர் மக்களுக்கும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய ஆழ்ந்த அனுதாபத்தினைத் தெரிவித்து, இங்கே அவை முன்னவர் அவர்கள் முன்மொழிந்த இரங்கல் தீர்மானத்தோடு எங்கள் இரங்கலை இணைத்துக்கொண்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில்.

**திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தினுடைய மூத்த உறுப்பினரும், மயிலாடுதுறையினுடைய நகராட்சித் தலைவராக இருந்தவருமான மரியாதைக்குரிய அபுல்ஹசன் அவர்கள் நேற்றையதினம், 19-1-2001 அன்று இறைவனின் அருளால் இறைவனடி எய்திய செய்தியை இன்றையதினம் அவை முன்னவர் அவர்கள் இங்கே அறிவிப்புச் செய்து, தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள், அவருடைய இறப்பிற்காக அனுதாபத் தீர்மானத்தை வழிமொழிந்து பேசியிருக்கிறார்கள். இந்த அனுதாபத் தீர்மானத்தில் தமிழ் மாநில தேசிய லீக் கட்சியின் சார்பில் எனது அனுதாபத்தையும் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.



2001 ஜனவரி 20] [திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில்]

பழகுவதற்கு ஏற்ற பண்பாளர், எளிமையானவர். அன்பு, அடக்கம் ஆகியவற்றைத் தன்னகத்தே கொண்டவர். இம்மாமன்றத்திலே 10 ஆண்டு காலம் பணியாற்றி, இங்கே அனைவருடைய உள்ளங்களையும் கொள்ளை கொண்ட ஒரு பண்பாளர். தஞ்சை மாவட்டத்திலே, இஸ்லாமிய சமுதாய மக்கள், சிறுபான்மை சமுதாய மக்கள் வாழ்கின்ற அந்த மாவட்டத்திலே அதிராமபட்டினத்திலே பிறந்து, மயிலாடுதுறையிலே நகராட்சி மன்ற உறுப்பினராகப் பொறுப்பேற்று, 10 ஆண்டு காலம் அம்மக்களுக்காக இந்த மாமன்றத்திலே குரல் எழுப்பி, தன்னுடைய அரிய சேவையை இங்கே செய்து முடித்து, எல்லாம் வல்ல இறைவனால் அவர் இறைவனடி சேர்ந்திருக்கிறார். அம்மாமனிதர் சிறுபான்மை சமுதாய மக்களுடைய அன்பையும், ஆதரவையும் பெற்றவர் என்ற முறையிலேதான் இரண்டு முறை அத்தொகுதியிலேயே போட்டியிட்டு வெற்றி வாய்ப்பைப் பெற்று, இங்கே எதிரணியிலே அமர்ந்திருந்தாலும், நம்முடைய முதல்வர் அவர்களுடைய அன்பையும், பாசத்தையும் பெற்று, முதல்வர் அவர்கள் தன்னுடைய அனுதாப உரையிலே கண்ணீர் மல்க இங்கே அபுல்ஹசன் அவர்களுடைய சேவைகளைப் பாராட்டி இருக்கிறார்கள் என்றால், சிறுபான்மை சமுதாய மக்கள் முதல்வருடைய உள்ளத்தைக் கொள்ளை கொள்கின்ற அளவுக்கு அவர் நடந்திருக்கிறார் என்பது தெரியும். அவருடைய அன்பும், அடக்கமும், பண்பும், பணிவும் இங்கே சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது.

அம்மாமனிதரை இழந்து வாடுகின்ற இஸ்லாமிய சமுதாய மக்களுக்கும், அவரது பிரிவால் வாடும் குடும்பத்தினர், உற்றார் உறவினர், சுற்றத்தாருக்கும், தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியைச் சார்ந்தவர்களுக்கும், தமிழ் மாநில தேசிய லீக் கட்சியின் சார்பிலும், எனது சார்பிலும் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்து, அவரது ஆன்மா சாந்தியடைய பிரார்த்தனை செய்தவனாக என் உரையை நிறைவு செய்கிறேன்.

*முற்பகல் 10-00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. வேலாயுதன்.

***திரு. சி. வேலாயுதன்:*** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. அபுல்ஹசன் அவர்களைக் காணும்போதெல்லாம் பெருந்தலைவர் காமராஜருடைய நினைவு வரும். பெருந்தலைவர் காமராஜர் அவர்கள்

நாகர்கோவில் தொகுதியில் பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டபோது அவரோடு நெருங்கிப் பழகக்கூடிய வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அவரைப் போன்று இவரும் ஒரு எளிமையானவர் என்பது மட்டுமல்ல, என்னைப் போன்ற புதிய சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அவருடைய ஊக்கம் மிகவும் பெரிதும் உதவும். நான் சட்டமன்றத்தில் பல சந்தர்ப்பங்களில் பேசிவிட்டு வெளியே செல்லும்போது, என்னைக் காணும்போது, 'நன்றாகப் பேசினீர்கள், இப்படித்தான் பேச வேண்டும்' என்றெல்லாம் ஊக்கம் தரக்கூடிய ஒரு மூத்த உறுப்பினராக இருந்தவர். அதோடு அரசியலில் ஒழுக்கம் என்பது--தனிப்பட்ட மனிதன் ஒழுக்கக் குறைவாக இருந்தால், அது நாட்டை பாதிக்காது. ஆனால், அரசியல் தலைவர்கள் ஒழுக்கம் இல்லாதவர்களாக இருந்தால் அது நாட்டையே பாதிக்கும் என்றெல்லாம்கூட என்னிடம் பல சந்தர்ப்பங்களில் நல்ல விஷயங்களைப் பேசி, ஆக்கமும் ஊக்கமும் தரக்கூடிய ஒரு நல்ல மனிதர். அவருடைய இழப்பு, அவருடைய குடும்பத்திற்கு மட்டுமல்ல, தமிழ் மாநில காங்கிரசுக்கு மட்டுமல்ல, ஒரு நல்ல அரசியலுக்கே இழப்பு என்று சொல்லக்கூடிய அளவுக்கு இருக்கிறது. உண்மையிலேயே நேற்று தொலைக்காட்சியில் செய்தி கேட்டவுடன் நான் அந்த அளவிற்கு வேதனைப்பட்டேன். நம்முடைய மாண்புமிகு அவை முன்னவர் பேராசிரியர் அவர்கள் கொண்டு வந்த இந்த இரங்கல் தீர்மானத்தில் அவரை இழந்து வாடக்கூடிய அவருடைய குடும்பத்திற்கு பாரதிய ஜனதா கட்சியினுடைய சார்பில் நாங்களும் எங்களது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்வதோடு, தமிழ் மாநில காங்கிரஸ் கட்சிக்கும் எங்களுடைய அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம். அவருடைய ஆன்மா நற்கதி அடைய வேண்டும், அவருடைய பண்பு அரசியலில் தழைத்தோங்கி தமிழகத்தில் வளர வேண்டும் என்று சொல்லி, இந்த வாய்ப்புக்கு நன்றி கூறி, அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையினுடைய மூத்த உறுப்பினர் பெரியவர் எம்.எம்.எஸ். அபுல்ஹசன் அவர்களுடைய மறைவுக்கு என்னுடைய ஆழ்ந்த அனுதாபத்தையும், இரங்கலையும் முதற்கண் தெரிவித்துக்கொள்கிறேன்.



'அடக்கம் அமரருள் உய்க்கும்' என்ற வள்ளுவர் வாய்மொழிக் கிணங்க, மிக அடக்கமாகவும், எளிமையாகவும் வாழ்ந்து, இனிமையாகவும், எல்லோரிடமும் மிகச் சிறந்த பண்பாளராகவும் பழகிய ஒரு பெரியவர். அவரோடு நெருங்கிப் பழகுகின்ற வாய்ப்பு சட்டமன்றக் குழுக்களுடைய பயணங்களின்போது எனக்குக் கிடைத்தது. அத்தகைய நேரங்களிலே, அவர்கள் எந்த அளவிற்கு மக்களை நேசிக்கிறார்கள், மக்களுக்காக உழைக்கிறார்கள் என்கிற செய்திகளையெல்லாம், அவர்களுடைய அனுபவங்களையெல்லாம் சொல்லி, பொது வாழ்வில் இப்படியெல்லாம் இருக்க வேண்டுமென் றெல்லாம் எங்களைப் போன்று இருப்பவர்களுக்கு அறிவுரைகள் வழங்குவார்கள். ஒரு திரைப்படத்திலே வருகின்ற வரிகளைப்போல

'இருந்தாலும் மறைந்தாலும் பேர் சொல்ல வேண்டும்,
இவர்போல் யார் என்று ஊர் சொல்ல வேண்டும்'

என்று சொல்வதற்கிணங்க வாழ்ந்த ஒரு பெரியவர். அவரை இழந்து வாடக்கூடிய அவரது குடும்பத்தாருக்கும், அவரை இழந்து தவிக்கின்ற தமிழ் மாநில காங்கிரசுக்கும் எங்களுடைய தமிழ்ப் பாட்டாளி மக்கள் கழகத்தினுடைய சார்பில் ஆழ்ந்த இரங்கலையும், வருத்தத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையினுடைய அனைத்து உறுப்பினர்களுடைய நல்ல எண்ணத்தையும், நட்பையும் பெற்று, எல்லோரும் பாராட்டுகின்ற வகையில் சிறந்த முறையில் பணியாற்றிய, அனைவருக்கும் நண்பராக விளங்கிய திரு. எம்.எம்.எஸ். அபுல்ஹசன் அவர்கள் நேற்று மறைய நேரிட்டு, இன்று இரங்கல் தீர்மானம் நிறைவேற்ற வேண்டிய நிலைமை ஏற்பட்டுவிட்டதற்காக நான் உள்ளபடியே வருந்துகிறேன். உலகியல் அடிப்படையில்,

'நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்திவ் வுலகு'

என்ற வள்ளுவருடைய குறள் உணர்த்துகிற வகையில் நம் எல்லோருடைய எண்ணத்திலேயும் நேற்று இருந்தார், இன்று இல்லாமல் போய்விட்டார் என்பதை எண்ணி இரங்கல் உணர்வைப் பெருக்கிக் கொள்ளக்கூடிய ஒரு நிலை இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது. அவர்களை

நான் சிலபல ஆண்டுகளாகத்தான் அறிந்து பழகுகிற வாய்ப்பு ஏற்பட்டது என்று சொன்னாலும், அரசியல் கட்சி வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்டும், நானும் ஒரு காலத்தில் மயிலாடுதுறையிலே படித்தவன் என்ற அந்தத் தொடர்பு காரணமாகவும் அங்கேயுள்ள பள்ளியினுடைய விழா நிகழ்ச்சிக்கு சென்றபோது, அந்த நிகழ்ச்சிக்குத் தலைமையேற்று என்னைப் பாராட்டுவதன் மூலமாக தன்னுடைய பேரன்பை வெளிப்படுத்திக் கொண்டதை நான் இன்றைக்கும் எண்ணிப் பார்க்கிறேன்.

*முற்பகல் 10-05*

பொதுத் தொண்டு என்பது மற்றவர்களுக்காக ஆற்றப்படுவது என்ற உணர்வோடு நகராட்சி மன்றத் தலைவராக அவர்கள் விளங்கிய அந்த நாட்களிலேயும், சட்டமன்ற உறுப்பினராக இரண்டு முறை இருந்த இந்த 10 ஆண்டு காலத்திலேயும் தொகுதி மக்களுக்கு எல்லாம், கட்சி வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்டு, சமய வேறுபாட்டுக்கு அப்பாற்பட்டு, வேறு எந்த வேறுபாடும் கருதாமல் இயன்ற வகையிலே எல்லாம் தன்னால் முடிந்த அத்தனைப் பணிகளையும் செய்வதிலே மிகுந்த ஊக்கத்தோடு செயல்பட்டவர் அவர் .

இன்னும் ஒன்று, அவர் கொஞ்சம் வசதியான குடும்பம் என்றாலும்கூட, எளியவர்கள், ஏழைகள் ஆகியோரிடத்திலே பழகுகிறபோது அவர் வசதியானவர் என்ற எண்ணம் அல்லது பணக்காரர் என்ற எண்ணம் யாருக்கும் ஏற்படுவதற்கு இடம் தராது பழகக்கூடியவர். ஒரு வகையிலே அவர் ஒரு மனிதநேய அடிப்படையில் வளர்ந்தவர் என்று நான் பாராட்ட விரும்புகிறேன். சமய நல்லிணக்கம் என்பது அவருடைய வாழ்க்கையிலே இயல்பாக அமைந்தது. அவருடைய சமயம் அவருக்குத்தான். அவரவர் சமயம் அவரவருக்கு என்ற உணர்வோடு அனைவரிடத்திலேயும் பழகுவதில் சிறந்து விளங்கியவர். தமிழ்ப் பண்பாடு, தமிழ் மரபு என்ற அந்த உணர்வு அவர்களிடத்திலே தழைத்து இருந்தது. அந்த நல்ல மனிதரை நான் பல ஆண்டுகளாகக் கண்டு, பழகி மகிழ்ந்து இருக்கிறேன். இன்று நாம் இழந்து இருக்கிறோம். தமிழ் மாநில காங்கிரஸ் கட்சித் துணைத் தலைவர் அவர்களும், அனைத்துக் கட்சித் தலைவர்களும் இந்த இரங்கல் தீர்மானத்தில் கலந்துகொண்டு, அவருடைய குடும்பத்தாருக்கும், அவர் சார்ந்திருக்கிற தமிழ் மாநில காங்கிரசுக்கும் தெரிவித்திருக்கிற அந்த



இரங்கல் உணர்வை நானும் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தத் தீர்மானத்தை முதல்வர் அவர்கள் இங்கே வழிமொழிந்து பேசியிருக்கிறார்கள். அதைத் தொடர்ந்து இந்த இரங்கல் தீர்மானத்தை இந்த அவையில் நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என் ஆழ்ந்த இரங்கலை அவருடைய குடும்பத்தாருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களும், பேரவையின் அனைத்துக் கட்சித் தலைவர்களும் தெரிவித்திருக்கிற இரங்கலோடு என்னுடைய இரங்கலையும் பேரவையின் சார்பில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றும் முகத்தான் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

*(மறைந்த இப்பெரியவருக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காத்ததன் மூலம் தீர்மானம் நிறைவேற்றப்பெற்றது)*

## 3. அறிவிப்பு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. இன்று (20-11-2001) எடுத்துக்கொள்ளப்படுவதாக இருந்த அலுவல்கள் அனைத்தும் 22-01-2001 திங்கட்கிழமை அன்று எடுத்துக்கொள்ளப்படும். மறைந்த பெரியவருக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் ஒத்திவைக்கப்படுகின்றன. பேரவை மீண்டும் திங்கட்கிழமை (22-01-2001) காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

*பின்னர், பேரவை முற்பகல் 10-09 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.*

## 4. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

1. 1988 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் விதிகளின் அட்டவணை-IIல் திருத்தங்கள் செய்யப்பட்டது குறித்து கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் 24-4-2000 ஆம்

நாளிட்ட 70 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1988 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 30/1988) 180(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

2. வருவாய்த் துறையின் 25-3-1959 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்ட S.R.O. 1797/1959 ஆம் அறிவிக்கை, 22-5-1964 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்ட 199/1964 ஆம் எண் அறிவிக்கை, 15-4-1970 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்ட 116/1970 ஆம் எண் அறிவிக்கை ஆகிய அறிவிக்கைகளில் திருத்தங்கள் செய்யப்பட்டது குறித்து வணிக வரிகள் துறையின் 31-8-2000 ஆம் நாளிட்ட 139 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

3. 1996 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநகராட்சிகள் பணி விதிகளில் திருத்தம் செய்யப்பட்டது குறித்து நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் 9-10-2000 ஆம் நாளிட்ட 140 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1971 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சி சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 15/1971) 432(2) பிரிவு, 1981 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சி சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 25/1981) 431(2) பிரிவு, 1994 ஆம் ஆண்டு திருச்சிராப்பள்ளி மாநகராட்சி சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 27/1994) 11(3) பிரிவு, 1994 ஆம் ஆண்டு திருநெல்வேலி மாநகராட்சி சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 28/1994) 11(3) பிரிவு மற்றும் 1994 ஆம் ஆண்டு சேலம் மாநகராட்சி சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 29/1994) 11(3) பிரிவு ஆகியவற்றின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

4. 1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் விதிகளில் திருத்தங்கள் செய்யப்பட்டது குறித்து உள் துறையின் 18-8-2000 ஆம் நாளிட்ட 900 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1988 ஆம் ஆண்டு இயக்கூர்திகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 59/1988) 212(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

5. 1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (உரிமங்கள், அனுமதிகள் ஆகியவற்றிற்கான விண்ணப்பங்கள் மீது ஆணைகள்



அனுப்புவதற்கான காலவரையறை) விதிகள் வகுப்பது குறித்து ஊரக வளர்ச்சித் துறையின் 21-7-1999 ஆம் நாளிட்ட 138 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 262 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

6. 1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் ஒரு கிராமத்திலிருந்து யாதொரு உள்ளூர் பகுதியை நீக்குதல் அல்லது யாதொரு உள்ளூர் பகுதியை சேர்த்தல் விதிகள் வகுப்பது குறித்து ஊரக வளர்ச்சித் துறையின் 21-7-1999 ஆம் நாளிட்ட 147 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 262 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

7. 1996 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநகராட்சிகள் பணி விதிகளில் திருத்தம் செய்யப்பட்டது குறித்து நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் 15-9-2000 ஆம் நாளிட்ட அரசாணை (3D) எண் 31-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1971 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சி சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 15/1971) 432 (2) பிரிவு, 1981 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சி சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 25/1981) 431 (2) பிரிவு, 1994 ஆம் ஆண்டு திருச்சிராப்பள்ளி மாநகராட்சி சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 27/1994) 11(3) பிரிவு, 1994 ஆம் ஆண்டு திருநெல்வேலி மாநகராட்சி சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 28/1994) 11(3) பிரிவு மற்றும் 1994 ஆம் ஆண்டு சேலம் மாநகராட்சி சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 29/1994) 11(3) பிரிவு ஆகியவற்றின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

8. 11-12-1996 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்ட S.R.O.B. 241/96 ஆம் எண் அறிவிக்கையில் திருத்தம் செய்யப்பட்டது குறித்து பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறையின் 22-10-1996 ஆம் நாளிட்ட பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறையின் 4-10-2000 ஆம் நாளிட்ட 195 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 320 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

9. 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு, இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல்நாட்டு சாராவிகள் (மொத்தமாக வழங்குதல்) விதிகளில்

திருத்தம்செய்யப்பட்டது குறித்து மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் 24-7-2000 ஆம் நாளிட்ட 166 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

10. 1997 ஆம் ஆண்டு தமிழ்நாடு (நிதி நிறுவனங்களில்) வைப்பீட்டாளர்களின் நலன்கள் பாதுகாப்பு விதிகளை வகுப்பது குறித்து உள் (நீதிமன்றங்கள்-II) துறையின் 10-11-1997 ஆம் நாளிட்ட 1618 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1997 ஆம் ஆண்டு தமிழ்நாடு (நிதி நிறுவனங்களில்) வைப்பீட்டாளர்களின் நலன்கள் பாதுகாப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 44/1997) 15(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

11. 1997-98 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் பதினான்காவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

12. 1999-2000 ஆம் ஆண்டிற்கான மாநகர் போக்குவரத்துக் கழகத்தின் (சென்னை கோட்டம்-1) இருபத்து எட்டாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

13. 1999-2000 ஆம் ஆண்டிற்கான மாநகர் போக்குவரத்துக் கழகத்தின் (சென்னை கோட்டம்-2) ஏழாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

14 1999-2000 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தின் (விழுப்புரம் கோட்டம்-3) எட்டாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

15. 1999-2000 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசு



போக்குவரத்துக் கழகத்தின் (மதுரை கோட்டம்-3) பதினேழாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

16. 1999-2000 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனத்தின் இருபத்து ஐந்தாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

## ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

1.தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் ஆளுநர் உரையாற்றும் போது பின்பற்ற வேண்டிய ஒழுங்குமுறை பற்றிய புத்தகம். (தமிழ், ஆங்கிலம்)

2. 2001 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 19 ஆம் நாள் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரை. (தமிழ், ஆங்கிலம்)

---

இந்நாளைய நடவடிக்கைக் குறிப்புகள் சட்டமன்றப் பேரவை நிருபர் பிரிவால் கணினி மூலம் வடிவமைக்கப்பட்டு அரசு மைய அச்சகத்தால் அச்சிடப்பட்டது.